**செய்தி வெளியீடு எண்: 463** **நாள்: 02.08.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

சவூதி அரேபிய சுகாதார அமைச்சகத்தின், அரசு மருத்துவமனைகளில் பணிபுரிவதற்கு இரண்டு வருட பணி அனுபவம் மற்றும் 55 வயதிற்க்குட்பட்ட கண்சல்டண்டுகள் (Consultants) மற்றும் சிறப்பு மருத்துவர்களுக்கான (Specialists) நேர்முகத் தேர்வு 26.08.2019 முதல் 27.08.2019 வரை கொச்சியிலும், 29.08.2019 முதல் 30.08.2019 வரை புது டெல்லியிலும், 01.09.2019 முதல் 02.09.2019 வரை மும்பையிலும் நடைபெற உள்ளது.

தேர்ந்தெடுக்கப்படும் மருத்துவர்களுக்கு அனுபவத்திற்கேற்ப சவூதி அரேபிய சுகாதார அமைச்சகத்தினரால் ஊதியம் நிர்ணயிக்கப்படும் .

இது தவிர, இலவச விமான டிக்கெட், உணவு, இருப்பிடம், குடும்ப விசா, மருத்துவச் சலுகை, போக்குவரத்து, 30 நாட்கள் சம்பளத்துடன் கூடிய வருடாந்திர விடுப்பு மற்றும் சவூதி அரேபிய அமைச்சகத்தின் சட்டத்திட்டத்திற்க்குட்பட்ட இதர சலுகைகள் வழங்கப்படும்.

எனவே, தகுதியுள்ள மருத்துவர்கள் தங்களின் சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் கல்வித்தகுதி, அனுபவம், பாஸ்போர்ட், ஆதார் நகல் மற்றும் வெள்ளைநிறப் பின்னணியில் எடுக்கப்பட்ட புகைப்படத்துடன் ovemcldr2@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 15.08.2019க்குள் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் ஊதியம் மற்றும் பணி விவரங்களை **அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவன வலைதளம் மூலமாகவும்** www.omcmanpower.com மற்றும் 044-22505886 / 22502267 / 8220634389 / 9566239685 என்ற தொலைபேசி எண்களின் மூலமாகவும் அறிந்து கொள்ளலாம்.

இந்திய அரசின் வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கான விவகார அமைச்சகத்தால் வழங்கப்பட்ட அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் முகவர் எண் Rc.No.B-0821/CHENNAI/CORP/1000+/5/308/84 ஆகும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**